புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • செப்டம்பர் 26, 2024 • புரட்சி 24 • முழக்கம் 38 • விலை ரூ.3.00

### கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவிப்பு

# ஒன்றிய அரசு அலுவலகங்களில் வடநாட்டார் ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம்

**தமிழ்நாட்டில் ஒன்றிய அரசு அலுவலகங்களில் வட நாட்டு அதிகாரிகளின் ஆதிக்கம் அதிகரித்துவிட்டது. அதை எதிர்த்துப் போராட வேண்டுமென்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி சென்னையில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய பெரியார் பிறந்தநாள் விழாவில் அறிவித்தார்.**



அன்றே பெரியார் எச்சரித்தார்! பறிபோகும் மாநில உரிமைகள் என்ற தலைப்பில் நடந்த கூட்டத்தில் பேசியக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பறிக்கப்படும் மாநில உரிமைகளைப் பட்டியலிட்டார். தன்னாட்சிக் குரல் நீதிக்கட்சி ஆட்சிக்காலத்திலேயே தொடங்கிவிட்டது. பெரியார் சுதந்திர நாளை துக்கநாள் – பார்ப்பனிய பனியாக்களுக்கு அதிகாரம் மாற்றப்பட்ட நாள் என்றார். தமிழ்நாடு விடுதலையே ஒரே தீர்வு என்றார். அண்ணா தென்னக மாநிலங்களின் கூட்டமைப்பைக் கொண்ட “திராவிட நாடு” கேட்டார். அரசியலுக்காக அதைக் கைவிட்ட போது கோரிக்கை கைவிடப்படுகிறது. ஆனால் அதற்கான காரணங்கள் அப்படியே நீடிக்கிறது என்றார். இப்போது மாநில உரிமைகளுக்காகத்தான் நாம் போராட வேண்டி இருக்கிறது. தமிழ்நாட்டில் ஒன்றிய அரசின் அலுவலகங்களில் அதிகாரிகளாக இந்தி பேசும் வடநாட்டுக்காரர்கள் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை நாம் எதிர்த்தாக வேண்டும். வட நாட்டில் இருந்து வரும் தொழிலாளர்களை நாம் எதிர்க்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

#### அமைச்சர் மனோ தங்கராஜ்

தமிழ்நாடு பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் பேசுகையில் வர்ணாசிரமம் தமிழர்களுக்கு எதிரானது. நமது தமிழர்களின் நெறி பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற வள்ளுவ நெறி. அடக்கப்பட்ட மக்களை மேலே உயர்த்துவது தான் நமக்கான தர்மம். தங்களை மேலாதிக்கத்தில் நிறுத்திக் கொண்டு மக்களை அடிமைப்படுத்துவது வர்ணாசிரம தர்மம். இந்தக் கருத்தியல் போர் தொடர்ந்து நடந்து வருகின்றது. நாம் தொடர்ந்து அந்தப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்க வேண்டும் என்றார்.

#### விடுதலை இராசேந்திரன்

பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தனது உரையில் இந்திய அரசியலில் மய்யமாக பெரியாரின் வகுப்புரிமை, தன்னாட்சி, மதவாத எதிர்ப்புக் கொள்கைகள் தான் இருக்கின்றன. ஒருகாலத்தில் இட ஒதுக்கீட்டை எதிர்த்த காங்கிரஸ் இன்று சமூகநீதிக்கான போராட்டக் களத்தில் முன் வரிசையில் நிற்கின்றது. ஏராளமான இளைஞர்கள் பெரியாரியலை நோக்கி வருகிறார்கள். முகநூல்களில் பார்ப்பன இந்துத்துவாவை கிழித்தெறிகிறார்கள். பெண்கள் தங்கள் உரிமைகளின் அடையாளமாகப் பெரியாரை ஏற்றுக்கொண்டுவிட்டனர். இளைய தலைமுறையின் எழுச்சியை நாம் மேலும் வளர்த்தெடுக்க செயல் திட்டங்களை உருவாக்கும்வோம் என்று குறிப்பிட்டார்.

#### கூட்ட நிகழ்ச்சி

பொதுக்கூட்டம் 21.09.2024 அன்று இராயப்பேட்டை வி.எம்.தெருவில் திருவல்லிக்கேணி பகுதிச் செயலாளர் இராஜேசு தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக அஜந்தாவில் உள்ள அண்ணா சிலைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாலை அணிவித்தார். பின்னர் அங்கிருந்து வி.எம்.தெரு பெரியார் படிப்பகம் வரை பறை இசை முழங்க பேரணியாக வந்து அங்கிருந்த பெரியார் சிலைக்கு கழகப் பெண்கள் மாலை அணிவித்தனர்.

முதலில் இசைப்போர் குழுவின் பறை இசை ஒலித்தது. தொடர்ந்து புதுவை விடுதலைக் கலைக் குழுவின் இசை நிகழ்ச்சி நடந்தது. பின்னர் மனிதி அமைப்பைச் சேர்ந்த ஸ்ரீதேவி ஆணவக்கொலைகளை எதிர்க்கும் நாடகத்தை உணர்ச்சியுடன் நிகழ்த்தினார்.

பின்னர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மாண்புமிகு தமிழ்நாடு பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். நிகழ்வை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி தொகுத்து வழங்கினார்.

கழக மாணவரணியான “தமிழ்நாடு மாணவர் கழகத்திற்கான” கொடியைக் கழகத் கொளத்தூர் மணி, மாண்புமிகு அமைச்சர் மனோ தங்கராஜ், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் அறிமுகப்படுத்தினார்கள்.

பொதுக்கூட்டத்திற்காக ஒரு மாதத்திற்கும் மேலாக உழைத்தத் தோழர்களுக்கு பயனாடை அணிவித்து கேடயம் வழங்கப்பட்டது.

**– நமது செய்தியாளர்**

# பெரியார் பிறந்தநாள் : கழகத் தோழர்கள் எழுச்சி



**சேலம் மேற்கு:** சேலம் மேற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் தந்தை பெரியார் 146 வது பிறந்தநாள் விழா எழுச்சியுடன் நடைபெற்றது.

மேட்டூர் டி.கே.ஆர் இசைக் குழுவின் பறை முழக்கத்தோடு தொடங்கிய இந்நிகழ்விற்கு மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார் தலைமை தாங்கினார்.

முதல் நிகழ்வாக மேட்டூரில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள் சுதா, சரசுவதி, அறிவுமதி, தேன்மொழி, காயத்ரி ஆகியோர் மாலை அணிவித்தனர். பின்னர் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

தோழர்கள் அனைவரும் தந்தை பெரியாரின் சிலைக்கு மரியாதை செலுத்தினர். அதனைத் தொடர்ந்து மேட்டூர் நகரச் செயலாளர் குமரப்பா கொள்கை முழக்கங்களை எழுப்ப.. தொடர்ந்து தோழர்கள் கொள்கை முழக்கங்களை எழுப்பினர். அதன் பிறகு தோழர்கள் அனைவரும் சமூக நீதி நாள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து இருசக்கர வாகனப் பேரணி சமத்துவபுரம் பெரியார் சிலையில் தொடங்கி நங்கவள்ளி, மேட்டூர் RS, மேட்டூர், கொளத்தூர், காவலாண்டியூரில் நிறைவுபெற்றது.

நங்கவள்ளி ஒன்றியத்துக்கு உட்பட்ட பனங்காட்டில் வனவாசி நகரத் தலைவர் செந்தில்குமாரும், மசக்காளியூரில் வனவாசி நகரச் செயலாளர் உமாசங்கரும், கீழ் வனவாசி பகுதியில் வனவாசி நகரப் பொறுப்பாளர் கதிர்வேல் மற்றும் பன்னீர்செல்வமும், நங்கவள்ளி பேருந்து நிலையத்தில் ச.தமிழருவியும், வீரக்கலில் காயத்திரியும் கழகக் கொடியினை ஏற்றி வைத்தனர்.

மேட்டூர் RS பகுதிக்கு உட்பட்ட ராமன் நகரில் சந்திரமூர்த்தி, RS பேருந்து நிறுத்தத்தில் அறிவுமதி, NSK நகரில் NSK பிரபாகரன், தண்ணிதொட்டியில் RS பகுதிச் செயலாளர் விவேக், தேங்கல்வாரையில் R.S பகுதித் தலைவர் முரளி, RS சேசாய் நகர் படிப்பகத்தில் கிளாரா மேரி, தங்கமாபுரிப்பட்டினத்தில் SMT பிரபாகரன், புதுப்பாலத்தில் சுகந்தன், சேலம் கேம்ப் பகுதியில் மேட்டூர் நகரச் செயலாளர் குமரப்பா ஆகியோர் கழகக் கொடியினை ஏற்றி வைத்தனர்.

மேட்டூர் நகரத்துக்கு உட்பட்ட நாட்டாமாங்கலத்தில் காளியப்பன், நேரு நகரில் அம்ஜித் கான், VPK நகரில் ஆனந்த், பாரதி நகரில் மாதையன், பொன் நகரில் மார்ட்டின், மணி மெடிக்கலில் கணேஷ்குமார், குமரன் நகரில் திவாகர், ஓர்க் ஷாப் கார்னரில் தேவராஜ், மேட்டூர் பேருந்து நிலையத்தில் தலைமைக் குழு உறுப்பினர் சக்திவேல், மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் சேலம் மாவட்ட பொருளாளர் சம்பத், மசூதி தெருவில் சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் அன்பு ஆகியோர் கழகக் கொடியினை ஏற்றி வைத்தனர்.

கொளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட கொளத்தூர் பேருந்து நிலையத்தில் பா.குமார், வாழ்குறிச்சியில் காயத்ரி, திருவள்ளுவர் நகரில் மூத்த தோழர் கோவிந்தராஜ், நான்கு ரோட்டில் பிரசாந்த், கொளத்தூர் பெரியார் படிப்பகத்தில் சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் ஆகியோர் கொடியேற்றி வைத்தனர்.

காவலாண்டியூர் பகுதிக்குட்பட்ட கண்ணாமூச்சியில் பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் மூலப் பாதையில் ராஜேந்திரன், காந்தி நகரில் பச்சியப்பன், செட்டியூரில் பழனிச்சாமி, சேசாய் காட்டுவளவுவில் காவலாண்டியூர் கிளைச் செயலாளர் தங்கராசு, காவலாண்டியூரில் சேலம் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் சரசுவதி ஆகியோரும் கழகக் கொடியினை ஏற்றி வைத்தனர்.

இந்த விழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட கழகத்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## தலையங்கம்

# காவிக்கும்பலின் பிடியில் நீதித்துறை?

உலகெங்கிலும் எல்லா மதங்களும் விழாக்களை கொண்டாட்டமாக மட்டுமே வைத்திருக்கின்றன. ஆனால் இங்கோ இந்து மதம் கலவரத்திற்காகவே ஒரு விழாவை வைத்துக்கொண்டிருக்கிறது, விநாயகர் ஊர்வலம் என்ற பெயரில். ஒவ்வொரு ஆண்டும் விநாயகர் சதுர்த்தியை கடப்பது சிறுபான்மை சமூகங்களுக்கு ஆழிப் பேரலையை கடப்பது போன்ற பேரச்சத்தை தந்து கொண்டிருக்கிறது.

சென்னை திருவல்லிக்கேணியில் பெரிய மசூதி வழியாக விநாயகர் ஊர்வலம் செல்வோம் என்று இந்து முன்னணி முரண்டு பிடிப்பதும், காவல்துறை தடுத்து அவர்களை கைது செய்வதும் தொடர்கதையாகிக் கொண்டிருக்கிறது. கர்நாடகா மாநிலம் மாண்டியா மாவட்டத்தில் விநாயகர் ஊர்வலத்தின்போது சிறுபான்மை சமூகத்தினரின் கடைகள் குறிவைத்துத் தாக்கப்பட்டு, எரிக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளன. கலவரத்தில் ஈடுபட்ட இந்துத்துவா கும்பலைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். உத்தரப் பிரதேசத்தின் மகோபா மாவட்டத்தில் இசுலாமியர்கள் அதிகமாக வாழும் கோத்வாலி பகுதி வழியாக இந்துத்துவா கும்பல் விநாயகர் சிலையை எடுத்துச் சென்று கலவரத்தை தூண்டி, கல்வீச்சு சம்பவத்தில் ஈடுபட்டுள்ளது. மகாராஷ்டிர மாநிலம் தானே மாவட்டம் பிவாண்டியில் உள்ள வஞ்சர்பட்டி நாகா என்ற இசுலாமியர்கள் அதிகம் வசிக்கும் பகுதியின் வழியாக விநாயகர் ஊர்வலம் சென்றபோதும் வன்முறை ஏற்பட்டுள்ளது.

தனிநபர்கள் வீடுகளில் வைத்து வழிபடும் விநாயகரால் பொதுச் சமூகத்துக்கு எந்த சிக்கலும் எழுவதில்லை. ஆனால் இந்துத்துவா கும்பல்கள் வைத்து, ஊர்வலம் நடத்தும் விநாயகர்களால்தான் சிக்கல்கள் எழுகின்றன. எனவே அமைப்புகளின் பெயரால் விநாயகர் சிலை வைக்கவும், ஊர்வலம் செல்லவும் தடை விதிக்க வேண்டுமென்று நீண்டகாலமாக முற்போக்கு சக்திகள் வலியுறுத்தி வருகின்றன. ஆனால் இனி தனி நபர்கள் சிலை வைத்தாலும் யார் வைக்கிறார்கள், அந்த வழிபாட்டில் யார் யார் பங்கேற்கிறார்கள் என்பதை ஆராய வேண்டிய தேவை இப்போது எழுந்துள்ளது. குறிப்பாக வீடுகளில் வைக்கப்படும் சிலைகளுக்கு பின்னாலும் மிகப்பெரிய அரசியல் சதிகள் இருக்குமோ என்று அஞ்சும் அளவுக்கு நிகழ்வுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

உச்சநீதிமன்றத்தின் தலைமைநீதிபதி டி.ஒய்.சந்திரசூட்டின் இல்லத்தில் நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி விழாவில் பிரதமர் மோடி நேரடியாக கலந்துகொண்டுள்ளார். நீதித்துறையை ஒன்றிய பாஜக அரசு கையாளும் போக்கின் மீதான எச்சரிக்கையை அதிகரிக்கச் செய்வதாக இருக்கிறது இந்நிகழ்வு. இதற்கு முன்பு அயோத்தி உள்ளிட்ட மிக முக்கிய வழக்குகளில் பாஜகவுக்கு ஆதரவாக தீர்ப்பளித்த நீதிபதிகள், ஓய்வுக்குப் பிறகு ஒன்றிய அரசின் சலுகைகள் பலவற்றைப் பெற்றனர். அயோத்தி வழக்கு விசாரணை அமர்வில் சந்திரசூட்டும் ஒருவர். எனினும் தேர்தல் பத்திரங்கள் முறையை ரத்து செய்து மிக முக்கியத் தீர்ப்பை வழங்கியது சந்திரசூட் தலைமையிலான அமர்வுதான். ஆனால் நவம்பர் 10ஆம் தேதியுடன் சந்திரசூட்டின் பதவிக்காலம் முடிவடைய உள்ள நிலையில்தான், விநாயகர் சதுர்த்தியையொட்டி நடைபெற்ற மோடி - சந்திரசூட் சந்திப்பை எச்சரிக்கையாகக் கருத வேண்டியுள்ளது.

2014-இல் மோடி பிரதமரானதில் இருந்தே நீதிபதிகள் இதுபோல பாஜகவுடன் நெருக்கம்காட்டும் பல்வேறு சம்பவங்கள் நடந்திருக்கின்றன. 2018 ஆம் ஆண்டில், மேகாலயா உயர்நீதிமன்றத்தின் நீதிபதி சுதீப் ரஞ்சன் சென் தனது தீர்ப்பில், "மோடி அரசாங்கம் மட்டுமே இந்தியா மற்றொரு இஸ்லாமிய நாடாக மாறுவதைத் தடுக்கும்" என்று கூறினார். அதே ஆண்டில், அப்போதைய பாட்னா உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி (பின்னர் அவர் உச்ச நீதிமன்றத்திற்கு உயர்த்தப்பட்டார்) எம்.ஆர்.ஷா, மோடியை ஒரு "ஹீரோ" என்று பாராட்டினார். பிப்ரவரி 2020-இல், உச்சநீதிமன்ற நீதிபதி அருண் மிஸ்ரா, சர்வதேச நீதித்துறை மாநாட்டின் தொடக்க விழாவில் மோடியை "உலக அளவில் சிந்திக்கும் மற்றும் உள்நாட்டில் செயல்படும் பல்துறை மேதை" என்று புகழ்ந்தார். அவர் பதவிக்காலம் முடிந்தவுடன், தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (NHRC) தலைவராக நியமிக்கப்பட்டார். அரசுக்கு ஆதரவான பல தீர்ப்புகளை வழங்கிய உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய், ஓய்வு பெற்ற பிறகு மாநிலங்களவையின் நியமன உறுப்பினரானார். அந்த வரிசையில் தனது பெயரும் இணைந்துவிடும் என்ற தயக்கமே இல்லாமல், மோடியை அழைத்து விநாயகர் சதுர்த்தியை கொண்டாடியிருக்கிறார் சந்திரசூட்.

ஒன்றிய அரசின் அதிகாரம் மிக்க உயர்பதவிகள், தன்னாட்சி அமைப்புகள் அனைத்திலும் ஆர்.எஸ்.எஸ். ஊடுருவல் பெருகிவிட்டது என்று ராகுல் காந்தி நேரடியாகக் குற்றம்சாட்டிக் கொண்டிருக்கிறார். அது நீதித்துறைக்குள்ளும் நடந்துகொண்டிருக்கிறது என்பதைத்தான் இவை காட்டுகின்றன. சமீபத்தில் விஷ்வ இந்து பரிசத் அமைப்பின் சட்ட அணி டெல்லியில் ஒரு ஆலோசனைக் கூட்டத்தை நடத்தியிருக்கிறது. அதில் ஒன்றிய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங் மேக்வால் கலந்துகொண்டுள்ளார். அவருடன் ஓய்வுபெற்ற நீதிபதிகள் சுமார் 30 பேர் கலந்துகொண்டதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. அதில் இருவர் உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகளாக பணியாற்றியவர்கள். வாரணாசி கோயில், மதுரா கோயில், வக்பு வாரிய மசோதா உள்ளிட்ட சர்ச்சைக்குரிய வழக்குகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகவும் முன்னணி ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இக்கூட்டத்தில் பங்கேற்றவர்களில் பலர் கடந்த காலங்களில் பாஜகவுக்கு சாதகமான தீர்ப்புகளை வழங்கியவர்கள் என்பதும் கவனிக்க வேண்டியது.

காவிகளின் பிடியில் இருந்து நீதித்துறை காக்கப்பட வேண்டும்.

# 'அய்யங்கார்' புடிச்ச லட்டு

"பாவம்! பாவம்! அனாச்சாரம் பகவான் பிரசாதத்துலேயே மாமிசம் கலந்துடுச்சு! இது அடுக்குமா? எதுல கலப்படம்னு ஒரு விவஸ்தை வேண்டாமோ? இதுக்கெல்லாம் என்ன பரிகாரம் செய்யுறது? நேக்கு எதுவுமே பிடிக்கல" என்று பதறுகின்றன வைஷ்ணவ ஆன்மீக வட்டாரங்கள்.

"ஆபத்து வந்துடுச்சு, நாட்டுக்கே ஆபத்து, சங்கராச்சாரிகளே, வேதப் பண்டிதர்களே, முன்னாள், இன்னாள் ஏழுமலையான் அர்ச்சகர்களே! இதற்கு ஒரு பரிகாரம் காணுங்கள், ஜெகன் மோகன் ரெட்டி முதலமைச்சராக இருந்த போது தான் இந்த பாவம் நடந்திருக்கு. அவரை சிறையில் தள்ள ஆகமத்தில் ஏதேனும் விதி இருக்கிறதா? என்று பார்த்து சொல்லுங்க" என்கிறார் ஆந்திரா முதல்வர் சந்திரபாபு.

"ஆமாம்! அவா ஆட்சிக்காலத்திலே தான் இந்த அநியாயம் நடந்துடுச்சு, அப்பவே சொன்னேன்" என்கிறார் ரிட்டையர்டு தலைமை அர்ச்சகர்.

"ஒய் ஒன்றும் குடி முழுகிப் போயிடல நம்ம வைஷ்ணவ ஆகம ஆராய்ச்சிக்காரர்களெல்லாம் இதற்கு தீர்வு கண்டுட்டுடோம். அண்மையில் தான் சாமிக்கு மலையில் 'பவித்ரோட்சவம்' செய்து முடுச்சுருக்கோம். இது ஒன்றே போதும். ஏற்கனவே செய்த பாவம், இனி செய்ய போகும் பாவம் எல்லாவற்றிற்கும் இதில் பரிகாரம் அடங்கி இருக்கு. எல்லா தீட்டுகளையும் ஒரே அடியில் அடிச்சு நொறுக்கிடும். இதுதான் வேத மந்திர சக்தி. பயப்படாதேள் என்கிறார்கள் ஆகம சயிண்டிஸ்டுகள்.

கெட்டுப் போன உணவை விற்கும் ஹோட்டல்களுக்கு அதிகாரிகள் சீல் வைத்து விடுகிறார்கள். கெட்டுப்போன பிரசாதத்தை வழங்கிய ஏழுமலையான் கோயிலை இழுத்து மூடவா முடியும். அதற்கு பரிகாரம் தானே செய்ய வேண்டும்?

சரி இருக்கட்டும்; சுகாதாரத்துறை அமைச்சர் நட்டா விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். அந்த விசாரணையில் கீழ்கண்டவற்றையும் பரிசீலிப்பது நல்லது.

சப்ளை செய்யும் நெய் பரிசுத்தமானது என்பதை கோயில் நிர்வாகம் ஏன் கண்காணிக்கவில்லை. அதை பரிசோதிக்க ஏன் ஒரு சோதனைக் கூடத்தை ஏற்படுத்தவில்லை. சோதனைக்கு குஜராத்துக்குத் தான் ஓட வேண்டுமா? பகவான் காலுக்கு தங்கச் செருப்புப் போடும் கோயில் நிர்வாகம். பக்தர்களுக்கு பிரசாதத்தை சுத்தமாக வழங்க ஒரு சோதனைக் கூடத்தை அமைச்சா என்ன? வெளி மார்க்கெட்டில் ஒரு கிலோ நெய் 700 ரூபாய். ஆனால் 300 ரூபாய்க்கு டெண்டர் போடுகிற கம்பெனிக்கு ஆர்டர் போகுது? அப்பவே இது கலப்பட நெய் என்பது இவர்களுக்கு தெரியாதா? நம்பி வரும் ஏழுமலையான் பக்தர்களை இப்படி புண்படுத்துவது நியாயம் தானா என்று புலம்புகிறார் ஒரு அப்பாவி பக்தர்.

நல்ல வேளை! மோசடி மகா விஷ்ணு சிறைக்குள் சிக்கிக் கொண்டார். வெளியே இருந்திருந்தால் போன ஜென்மத்தில் பக்தர்கள் செய்த பாவத்திற்குத்தான் இந்த ஜென்மத்தில் மாட்டுக் கொழுப்பு சாப்பிடுகிறார்கள் என்று 'ஆன்மீகம்' பேசியிருப்பார்.

தமிழ்நாட்டின் இந்து முன்னணி தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியன் பொங்குகிறார். "வாங்க! ஆஞ்சநேயனிடம் போய் முறையிடுவோம். வரும் 28ஆம் தேதி அங்கே தேங்காய் உடைத்து குற்றவாளிகளைக் கூண்டில் ஏற்ற பிரார்த்திப்போம் என்று அவசர அழைப்பு விடுகிறார். அதையாவது நல்ல தேங்காயாக பார்த்து வாங்க சொல்லுங்க சார். அதுவும் அழுகிய தேங்காயாக இருக்கப் போகுது.

"சைவர்கள் (அதாவது சைவ சித்தாந்தம் அல்ல; சைவ சாப்பாடு) சாப்பிடும் எல்லா இனிப்புகளிலுமே விலங்குக் கொழுப்புகள் தான் சேர்க்கப்படுகின்றன. எல்லா ஸ்வீட் ஸ்டால்களிலும் அவைதான் விற்கப்படுகின்றன. சைவ ஸ்வீட் கடைகள் என்று தனியாக ஒருசில கடைகள் இப்போது தான் வரத் தொடங்கியிருக்கின்றன. லட்டு ஒரு இனிப்பு தானே அதை சாப்பிடுவது மட்டும் என்ன பாவம் என்று கேட்கிறார் ஒரு பகுத்தறிவாளர். கேள்வி நியாயம் தான்.

"சார்! இது சாதாரன லட்டு இல்ல, ஆகம லட்டு! அதுவும் அய்யங்கார் கைகளால் மட்டுமே பிடிக்கப்படும் லட்டு. ஸ்மார்த்த பிராமணர்கள் கைப்பட்டாலே தீட்டாகிடும்" என்கிறார்கள் வைஷ்ணவ பக்தர்கள். கை சுத்தக்காரர்கள்!

கடைசியாக ஒரு கேள்வி. நீங்கள் கூறும் சுத்தமான நெய் பசு மாடு என்னும் விலங்கிடம் கறக்கும் பாலில் இருந்துதானே எடுக்கப்படுகிறது. விலங்கு கொழுப்பை எதிர்க்கிறீர்கள். விலங்குவின் பால், நெய், கோமியம் மட்டும் உங்களுக்கு புனிதமா? பதறாதீர்கள்! பதில் சொல்லுங்கள்!

**- கோடங்குடி மாரிமுத்து**

## திருப்பூர் கழகத் தோழர் கோமதி மறைவு



திருப்பூர் மாநகரக் கழகக் களப்பணியாளர் திருப்பூர் மாஸ்கோ நகர் பகுதியைச் சேர்ந்த கோமதி 18.09.2024 மாலை உடல்நலக்குறைவால் முடிவெய்தினார். அவரது உடல் 19.09.2024 அன்று அடக்கம் செய்யப்பட்டது.

இறுதி நிகழ்வில் திருப்பூர், கோவை, சேலம், கோவை, ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

# வேதப் புரட்டைத் தகர்த்து திராவிட நாகரீகத்தை உறுதிப்படுத்திய ஜான் மார்ஷல்!

19-ம் நூற்றாண்டில் உலகின் பழமையான நாகரீகமாக பார்க்கப்பட்டது எகிப்திய, சுமேரிய, மெசபத்தோமியா நாகரீகங்கள்தான். அதனைத் தொடர்ந்து மாயன் நாகரீகமும், சீன நாகரிகமும் மிகப் பழமையானதாக கருதப்பட்டு வந்தது. ஆனால் இந்தியாவை பொறுத்தவரை அதற்கு என தனி நாகரீகம் என்று எதுவும் இருந்ததாக யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

மாறாக ஆரியர் வருகைக்கு பின்னர்தான் இந்திய நாகரீகம் வளர்ச்சி அடைந்தது என்றும், அதற்கு முன்னர் இங்கு இருந்த மக்கள் நாகரீக வளர்ச்சியின்றி நாடோடி வாழ்க்கையை வாழ்ந்தனர் என்பது தான் மேற்கத்திய ஆய்வாளர்களின் கருத்தாக இருந்தது. அவர்களை பொறுத்தவரை இந்தியாவின் முதல் நகரமே பாடலிபுத்திரா என்று அழைக்கப்பட்ட பாட்னாதான்.

ஆனால், இவைகள் எல்லாம் சிந்துநதிக் கரையில் ஒளிந்துகொண்டிருந்த மிகப்பெரும் பழங்கால நாகரீகத்தின் அடையாளங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர்தான். அதாவது 1924ஆம் ஆண்டு செப்டம்பர் 20ஆம் தேதி இந்தியாவை மட்டுமல்ல, உலகையே புரட்டிப்போட்ட ஒரு ஒரு ஆய்வு முடிவு *'The Illustrated London News'* இதழின் முகப்புப் பக்கத்தில் வெளிவந்தது.

அந்த ஆய்வு கட்டுரை இந்தியாவை நாகரீகப்படுத்தியது வந்தேறி ஆரியர்கள் கிடையாது என்று உரக்க சொன்னது. ஆரியர்கள் இந்தியாவுக்கு வரும் முன்னரே எகிப்திய, சுமேரிய, மெசபத்தோமியா நாகரீகங்களுடன் போட்டிபோட்ட ஒரு நாகரீக சமூகம் இந்திய மண்ணில் ஆரவாரத்துடன் கொடிகட்டிப் பறந்தது என்பதையும் வெளிப்படுத்தியது.

ஐரோப்பியர் நாடோடிகளாக சுற்றிக் கொண்டிருந்த காலத்திலேயே இந்திய மண்ணில் நிலையான வீடுகள் கட்டப்பட்ட நகர அமைப்பு முறை இயங்கியுள்ளது. அந்த சமூகம் முன்னேறிய சமூகங்களுக்கு உரிய அடையாளமான வணிகத்திலும் ஈடுபட்டு வந்துள்ளது என்ற உண்மையை இந்த ஆய்வு கட்டுரை உலகுக்கே எடுத்துக்கூறியது.

இந்த ஆய்வு முடிவு இந்தியாவில் ஒரு மாபெரும் கலாச்சார புரட்சிக்கும் வித்திட்டது. அதுவரை வேத நாகரீகமே இந்தியாவின் அடையாளம் என்றும், அதில் இருந்தே இந்திய வரலாறு தோன்றியது என்றும் சொல்லிக்கொண்டிருந்த நிலை மாறி, இந்தியாவின் வரலாறு அதற்கும் முந்தையது என்பதை உறுதிப்படுத்தியது.

அதை பற்றி பார்க்கும் முன்னர் அந்த ஆய்வுக் கட்டுரையை யார் எழுதியது என்பதையும் பார்ப்பது முக்கியமானது. கிழக்கிந்திய கம்பெனியின் இராணுவத்தில் பணிபுரிந்த சார்லஸ் மாசன் என்பவர் 1829 இல் தற்போது பாகிஸ்தான் பகுதியில் உள்ள பஞ்சாப் பகுதி வழியாக சென்றபோது அங்கு



சிறிய அளவிலான இடிபாடுகளோடு ஒரு இடம் இருப்பதை கண்டு, இதனை பற்றி முதல் முறையாக குறிப்பிட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து கிழக்கிந்திய கம்பெனியின் இராணுவத்திற்கு சாதகமான நீர் வழி பாதையை உருவாக்க நியமிக்கப்பட்ட அலெக்சாண்டர் பர்னஸ் என்பவரும் சிந்து நதி கரையில் இருக்கும் பழமையான கட்டட இடிபாடுகள் குறித்தும் கம்பெனிக்கு தெரியப்படுத்தியுள்ளார். இந்த சூழலில் பஞ்சாப் பகுதி முழுக்க கிழக்கிந்திய கம்பெனியின் கட்டுப்பாட்டுக்கு வந்தது.

**வேதப் புராணக் கட்டுக் கதைகளைக் காட்டி சிந்து நாகரீகத்துக்கு சொந்தம் கொண்டாடிய ஆரியர்களுக்கு அகழ்வாராய்ச்சி மூலம் ஆப்பு வைத்தார் ஜான் மார்ஷல். அறிவித்த நாள் 1924, செப்டம்பர் 20, ஒரு நூற்றாண்டு நிறைவடைகிறது.**

தொடர்ந்து கிழக்கிந்திய கம்பெனி உருவாக்கிய முல்தான் - லாகூர் இடையேயான ரயில் போக்குவரத்தின்போது தற்போது ஹரப்பா இருக்கும் பகுதியின் பழமை குறித்து தொல்லியல் ஆய்வாளர்களுக்கு தெரியவந்தது. இதனுடைய இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தின் முதல் இயக்குனரான அலெக்சாண்டர் கன்னிங்காம் என்ற தொல்லியல் துறை ஆய்வாளர் ஹரப்பா கட்டட இடிபாடுகளை, தொலைந்துபோன பழங்கால பௌத்த நகரம் என நினைத்து, அங்கு தன்னுடைய ஆய்வுகளை மேற்கொண்டார்.

பின்னர் இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தின் இயக்குனராக நியமிக்கப்பட்ட ஜான் மார்ஷல் காலத்தில் நடந்த தொடர் அகழாய்வில் ஹரப்பா கட்டட இடிபாடுகள் பௌத்த நாகரீகத்துக்கும் முந்தையது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் ஹரப்பா போலவே அதற்கு அருகில் இருந்த மொஹஞ்சதாரோ பகுதியிலும் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டு இரண்டும் ஒரே நாகரிகத்தை சேர்ந்தது என்பது உறுதி செய்யப்பட்டது. மேலும் இதுவரை இந்தியாவில் கிடைத்த அனைத்து பொருள்களையும் விட இங்கு கிடைத்த பொருள்கள் காலத்தால் பழமையானவை என்பதும் உறுதியானது.

அதனைத் தொடர்ந்து தனக்கு கிடைத்த ஆய்வுகளின் அடிப்படையில் ஹரப்பா, மொஹஞ்சதாரோ பகுதியில் ஒரு பழங்கால நாகரீகம் இருந்தது என்பதை குறிப்பிட்டு *'The Illustrated London News'*-க்கு தனது ஆய்வு கட்டுரையை எழுதினார். அது சரியாக இன்றிலிருந்து 100 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியானது.

ஹரப்பா, மொஹஞ்சதாரோ பகுதிகள் சிந்து நதி கரையின் அருகில் இருந்தவை சிந்துசமவெளி நாகரீகங்கள் என்று அழைக்கப்பட்டன. இங்கு கிடைத்த பொருட்கள் வேதகாலத்துக்கும் முந்தையது என்பது உறுதிசெய்யப்பட்ட நிலையில், இந்தியாவின் ஆதி குடிகள் குறித்த கேள்விக்கான விவாதம் எழுந்தது.

வேதப் புராணக் கட்டுக்கதைகளைக் காட்டி சிந்து நாகரீகத்துக்கு சொந்தம் கொண்டாடிய ஆரியர்களுக்கு அகழ்வாராய்ச்சி மூலம் ஆப்பு வைத்தார் ஜான் மார்ஷல். அறிவித்த நாள் 1924, செப்டம்பர் 20, ஒரு நூற்றாண்டு நிறைவடைகிறது.

ஏற்கனவே கால்டுவெல்லின் திராவிட மொழிகள் குறித்த ஆய்வு வெளியாகி சமஸ்கிருதம் உள்ளிட்ட வடஇந்திய மொழிகள் இந்தியாவுக்கு வெளியே இருந்து இங்கு வந்தது என்ற கோட்பாடு உருவான நிலையில், அதனை ஜான் மார்ஷலின் சிந்துசமவெளி நாகரீகங்கள் குறித்த ஆய்வு உறுதிப்படுத்தும் விதமாக அமைந்தது.

எனினும் வேதகாலத்தை போற்றும் சில ஆய்வாளர்கள் சிந்துசமவெளி நாகரீகத்தை சரஸ்வதி நாகரீகம் என அழைக்கத்தொடங்கினர். ஆனால் தொடர்ந்து சிந்துசமவெளி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வியலுக்கும் வேத கால மக்களின் வாழ்வியலுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பதும், சிந்துசமவெளி பகுதியில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் இந்தியாவின் தென் பகுதியில் வாழும் திராவிட மக்களுடனே தொடர்புப்படுவதாகவும் தெரியவந்தது.

பின் வந்த காலத்தில் சிந்துசமவெளி மக்களும் திராவிட மக்களே என்றும் ஆய்வு கட்டுரைகள் வெளியாகின. இது தென்னிந்தியாவில் பெரும் பண்பாட்டு எழுச்சியை ஏற்படுத்தின.

இவ்வாறு இந்தியா மட்டுமல்ல, உலக வரலாற்றையே புரட்டிப்போட்ட சிந்து சமவெளி நாகரீகத்தை கண்டுபிடித்து உலகுக்கு அறிவித்த ஜான் மார்ஷலின் செயல் வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்டது. சிந்து சமவெளி நாகரீகமும் இந்தியாவுக்கு உலக வரலாற்றில் ஒரு அழிக்க முடியாத ஒரு இடத்தை பெற்றுத்தந்தது.

'இந்திய வரலாறு தெற்கில் இருந்து எழுதப்பட வேண்டும்' என்ற முதலமைச்சரின் முழக்கத்தை 100 ஆண்டுகளுக்கு முன்பே முன்மொழிந்தவர் ஜான் மார்ஷல்.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# பேரணி - கொடியேற்றம் - பரப்புரைக் கூட்டங்கள்

முதல் பக்கத் தொடர்ச்சி

தோழர்கள் பங்கேற்றனர். அனைவருக்கும் மதியம் மற்றும் இரவு அசைவ உணவு பரிமாறப்பட்டது. மேலும் பெரியார் பிறந்தநாள் சிறப்பாகக் கொண்டாடும் விதமாக சேலம் மாவட்டம் முழுவதும் 800 சுவரொட்டிகளும், எல்.இ.டி மின் விளக்குகளால் பெரியாரை அலங்கரித்தும் வைத்திருந்தனர்.



**கோவை :** கோவை மாவட்டக் கழக சார்பில் தந்தை பெரியார் 146வது பிறந்த நாள் விழா கவுண்டம் பாளையத்தில் நிர்மல்குமார் தலைமையில் நடைபெற்றது. தோழர் மாதவன் உறுதிமொழி கூறினார்.

இதில் திமுக கவுன்சிலர் கிருஷ்ண மூர்த்தி, திமுக வார்டு செயலாளர் தன்ராஜ், சிவக்குமார், கருணா ஆனந்த், சிவ ரமேஷ், முருகேசன் கலந்து கொண்டனர்.

சிவானந்தா காலனியில் நடைபெற்ற நிகழ்விற்கு சதீஸ் தலைமை தாங்கினார். மாநகரச் செயலாளர் வெங்கட் அவர்கள் வரவேற்புரையாற்றினார். மேலும் தமிழ்ப் புலிகள் கட்சித் தலைவர் நாகைதிருவள்ளுவன், மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம், மாநகரத் தலைவர் நிர்மல்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இதில் தமிழ்ப்புலிகள் கட்சிப் பொதுச் செயலாளர் இளவேனில், துணைப் பொதுச்செயலாளர் இராமச்சந்திரன், விசிக தகவல் தொடர்பு மாவட்ட அமைப்பாளர் கோவை ராசா, திமுக வட்ட செயலாளர் ஆறுமுகம் பங்கேற்றனர். மாநகர அமைப்பாளர் கிருஷ்ணன் நன்றி கூறினார்.

தொடர்ந்து காந்திபுரம் பெரியார் சிலைக்கு மாநகரத் தலைவர் நிர்மல்குமார் தலைமையிலும், பீளமேட்டில் மாநகர அமைப்பாளர் கிருஷ்ணன் தலைமையிலும், உப்பிலிபாளையம் காந்திநகர் பகுதியில் இராமகிருஷ்ணன் முன்னிலையில், நிலவழகன் தலைமையிலும், நியூ சித்தாபுதூரில் மறைந்த திராவிடர் இயக்கப் பற்றாளர் சக்திவேல் திடலில் காந்திபுரம் பகுதி அமைப்பாளர் லோகு தலைமையிலும் நடைபெற்றது. மனோரஞ்சனி உறுதிமொழி கூறினார்.

இதில் திமுக பகுதிப் பொறுப்பாளர் இராஜேந்திரன், திமுக இளைஞரணி சுபாஷ், சூலூர் தமிழ்ச்செல்வி, சிவலிங்கம், நாகலட்சுமி, நவீன், அறிவுக்கனல், அன்னூர் அறிவு, கருணா ஆனந்த் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பொள்ளாச்சி:** ஆனைமலை முக்கோணத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர் வே. அரிதாஸ் தலைமையில், வே.வெள்ளிங்கிரி முன்னிலையில் பெரியார் பிறந்தநாள் விழா நடைபெற்றது. ஆனைமலை பேரூராட்சி மன்றத் தலைவர் கலைச்செல்வி கழகக் கொடியை ஏற்றி வைத்து சிறப்பித்தார்.

மேலும் ஆனைமலை சமத்துவபுரம் மற்றும் பொள்ளாச்சியிலும் கழக சார்பில் பெரியார் பிறந்தநாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதில் ஆனைமலை அப்பாதுரை, மணி, வினோதினி, நடராஜ், கணேஷ், ஆனந்த், சபரிகிரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மேட்டுப்பாளையம்** மற்றும் காரமடையில் பகுதிப் பொறுப்பாளர் அமுல்ராஜ் தலைமையில் பெரியார் பிறந்தநாள் விழா நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து காரமடை பேருந்து நிறுத்தத்திலும் கொண்டாடப்பட்டது.

இதில் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், காரமடை அமைப்பாளர் ஜெகதீஷ், பகுத்தறிவாளர் கழகம் ரங்கராஜ், இரும்பொறை சுந்தரமூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



**திருப்பூர் :** திருப்பூர் மாவட்ட கழகத்தின் சார்பில் தந்தை பெரியாரின் 146ஆவது பிறந்தநாள் விழா மற்றும் உறுதிமொழி ஏற்பு நிகழ்வு 17.09.24 செவ்வாய் காலை 10.00 மணி அளவில் திருப்பூர் இரயில் நிலையம் முன்பு உள்ள தந்தை பெரியாரின் சிலை முன் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு கழகப் பொருளாளர் துரைசாமி தலைமை தாங்கினார், மாவட்டத் தலைவர் முகில் ராசு முன்னிலை வகித்தார்.

முதல் நிகழ்வாக பெரியாரின் சிலைக்கு கழகப் பொருளாளர் துரைசாமி, நவீன மனிதர்கள் அமைப்பின் தலைவர் பாரதி சுப்பராயன், புரட்சிகர இளைஞர் முன்னணி அமைப்பின் தமிழ் அமுதன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அப்பொழுது தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி கொள்கை முழக்கங்களை எழுப்ப தொடர்ந்து தோழர்கள் கொள்கை முழக்கமிட்டார்கள்.

அடுத்து தந்தை பெரியார் குறித்து கழகப் பொருளாளர் துரைசாமி, மாவட்டக் கழகத் தலைவர் முகில்ராசு, நவீன மனிதர்கள் அமைப்பின் தலைவர் பாரதி சுப்பராயன், இயற்கை ஆர்வலர் கோவை சதாசிவம் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு மாணவர் கழகத்தைச் சேர்ந்த பல்லடம் தேன்மொழி சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்பை படிக்க தோழர்கள் தொடர்ந்து கூறி உறுதிமொழி ஏற்றுக் கொண்டார்கள்.

அடுத்ததாக கழகத் தோழர்கள் ரூபசிரி - அரிசுகுமார் இணையரின் மகளுக்கு கழகப் பொருளாளர் துரைசாமி கழகத் தோழர்களின் மகிழ்ச்சியான கரவொலிக்கு இடையே மிழினா (அழகிய விழியுடையாள்) என்று பெயர் சூட்டினார்.

பெரியார் பிறந்தநாள் மகிழ்வாக கூடியிருந்த தோழர்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாநில, மாவட்ட, மாநகர ஒன்றிய பொறுப்பாளர்கள், கழகத் தோழர்கள் மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகம், புரட்சிகர இளைஞர் முன்னணி, நவீன மனிதர்கள் தொடர்ந்து தோழர்கள் பங்கேற்றனர்.

**மடத்துக்குளம் :** மடத்துக்குளம் ஒன்றியக் கழக சார்பில் கடத்தூர், காரத்தொழுவு, கணியூர், மடத்துக்குளம் ருத்தரபாளையம் பகுதிகளில் கழகக் கொடியேற்றிக் கொண்டாடப்பட்டது. மேலும் கொழுமம் சமத்துவபுரத்தில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து அனைவரும் உறுதிமொழி ஏற்றனர். இந்நிகழ்வில் தோழர்கள் த.கணக்கன், சு.சிவானந்தம், வே.அய்யப்பன், வெ.சரவணன் வினோத், கதிரவன், மதிமுக சாந்து முகமது ஆகியோர் கலந்து கொண்டனர்.



**ஈரோடு தெற்கு :** ஈரோட்டில் பெரியாரிய இயக்கங்களின் சார்பில் கல்வி உரிமையை மீட்போம்! மாநில உரிமையைக் காப்போம்! என்ற முழக்கத்துடன் கல்வி உரிமை மீட்புப் பேரணி நடைபெற்றது. இதில் ஈரோடு கிழக்கு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், கல்வியாளர் பிரின்சு கஜேந்திரபாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்னர் பேரணி ஈரோடு சம்பத் நகரில் துவங்கி தந்தை பெரியார் தலைமை மருத்துவமனை வழியாக சென்று ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவிலுள்ள பெரியார் சிலையில் நிறைவடைந்தது. பின்னர் அங்குள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து, அனைவரும் சமூகநீதி நாள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இதில் ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத் தோழர்கள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மேலும் பெரியாரிய, அம்பேத்கரிய, மார்க்சிய இயக்கங்கள் இந்தப் பேரணியில் பங்கேற்றனர்.

**ஈரோடு வடக்கு :** ஈரோடு வடக்கு மாவட்டக் கழக சார்பில் கொளப்பலூர், கோபி, காந்திநகர், அளுக்குளி, இந்திரா நகர், காசிபாளையம், சத்தி, மூணுவீடு, நம்பியூர், குருவரெட்டியூர் உள்ளிட்டப் பகுதிகளில் பெரியார் பிறந்தநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

**வேலூர்:** ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டக் கழக சார்பில் மாவட்டத் தலைவர் நெமிலி திலீபன் தலைமையில் பெரப்பேரி கிராமத்தில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

பின்னர் வாணியம்பாடி, புல்லூர் பகுதியில் புல்லூர் சுரேஷ் தலைமையிலும், இராணிப்பேட்டை சமத்துவபுரத்தில் பாஸ்கரன் தலைமையிலும், மாவட்டச் செயலாளர் சிவா தலைமையில் குடியாத்தம் பகுதியிலும் பெரியார் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

ஆம்பூர், MV குப்பத்தில் அம்பேத்கர் இரவுப் பள்ளி ஏற்பாடு செய்த பெரியார் பிறந்தநாள் விழாவில் மாவட்டச் செயலாளர் சிவா தலைமையில் கழகத் தோழர்கள் பங்கேற்று சிறப்பித்தனர். வாணியம்பாடி பெரியார் பிறந்தநாள் விழாப் பொதுக்கூட்டத்தில் சுரேசு பங்கேற்றார்.

**தஞ்சாவூர் :** பேராவூரணியில் தந்தை பெரியார் சிலைக்கு பேராவூரணி ஒன்றியச் செயலாளர் மருத. உதயகுமார் தலைமையில் சீனி.கண்ணன் மாலை அணிவித்தார். நிகழ்வில் மாவட்ட அமைப்பாளர் சித. திருவேங்கடம், ஒன்றியத் தலைவர் அ. கோவேந்தன், சேது ஒன்றிய அமைப்பாளர் சுப. ஜெயச்சந்திரன், அறிவுச் செல்வன், அரும்புச் செல்வன் மற்றும் தோழமை இயக்கத்தினர் கலந்துகொண்டனர்.

முடச்சிக்காடு பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் உள்ள பெரியார் சிலைக்கும், சேதுபாவாசத்திரம், மரக்காவலசையில் பெரியசாமியின் சக்கரவர்த்தி நினைவு பெரியார் இல்லத்தின் மாடியில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.



**சிவகங்கை :** சிவகங்கை மாவட்டக் கழக சார்பில் காளையார்கோவில் சமத்துவபுரம், காரைக்குடி இளங்கோவன் இல்லம், காரைக்குடி பெரியார் சிலை மற்றும் பனந்தோப்பு உள்ளிட்ட இடங்களில் பெரியார் பிறந்தநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

**நாமக்கல் :** பள்ளிபாளையத்தில் கழக சார்பில் தந்தை பெரியார் 146வது பிறந்தநாள் விழா கழகக் கொடியேற்றி கொண்டாடப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : September 26, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran